மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்போது அதுபற்றி அறிவிப்பதற்கு முடியாத நிலையிலே இருக்கிறோம். ஏன் என்றால் இன்னும் ஆரம்ப நிலையிலேதான் இருக்கின்றது.

District Development Council in its meeting held on 21-3-1980. அன்றுதான் அரசாங்கத்திற்கு ஒரு கடிதத்தை எழுதி அதுபற்றி பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் அதாவது மார்ச் மாதம். ஆகவே இதுபற்றி ஆரம்ப நிலையிலே தான் இருக்கிறோம். இதற்கு எவ்வளவு மதிப்பீடாகும், எத்தனை காலத்திற்குள் செய்து முடிக்கலாம் என்பதெல்லாம் இன்னும் சிந்திக்க வேண்டிய கட்டத்திலே தான் இருக்கிறோம்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், இப்பொழுதுதான் திட்டத்திற்கான ஆரம்பக் கட்டத்தில் இருப்பதாகச் சொன்னார்கள், கிட்டத்தட்ட அந்த தொகுதியில் இருக்கிற மக்கள் எல்லாம் ஒரு ஆக்ஸிடெண்ட் ஆனால் கூட போஸ்ட் மார்ட்டம் செய்ய வேண்டுமானால் கோவைக்கு அல்லது திருப்பூருக்குச் செல்ல வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. அதுவும் அல்லாமல் அது ஒரு தாலூக்கா மையமாக இருப்பதினால் அவசர அவசியமாக அந்த பிரைமரி ஹெல்த் சென்டரை, ஒரு தாலூக்கா மருத்துவ மனையாக கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் உடனடியாக எடுக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த திட்டத்திற்காகத்தான் டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீசரை, உடனடியாக அங்கே போய் பார்த்து, என்னென்ன செய்ய வேண்டும், எப்படி திட்டங்கள் போட வேண்டும், என்னென்ன வாங்க வேண்டும் எப்படி அமைக்கலாம் என்பது பற்றி எல்லாம் ஆராய்ந்து அனுப்ப வேண்டும் என்று கடிதம் மூலமாக கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். தொலைபேசி மூலமாக வேண்டுமானால் சொல்லி, நடவடிக்கையை துரிதப்படுத்தலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே நேரிடையாக கூட இந்தப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல அந்த இடத்திலே ஒரு தாலூக்கா மருத்துவமனை தேவை என்பதை அரசும் உணர்ந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தின் அடிப்படையில் செயலாற்றிக் கொண்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்வர் விசாரணை கமிஷன் முடிவுகள்.

குறுகிய காலவினா எண். 21 திரு. கு. ரமணி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1981 மே 14]

(அ) 1978 ஜுலை மாத இறுதியில் சென்னை பேஸின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 தொழிலாளர்கள் இறந்து விட்டது குறித்து விசாரணை நடத்த அன்வர் என்ற ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் ஒருவரை நிர்ணயித்து நடத்தப்பட்ட விசாரணையின் முடிவு என்ன?

(ஆ) விசாரணை அறிக்கை இதுவரை வெளியிடப்படாதது ஏன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இவ்விபத்து 1979 ஜுலை மாதத்தில் ஏற்பட்டது. திரு. அன்வர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இவ்விபத்து அனல் மின் நிலையத்தின் ஆலைப் பகுதியில் ஒரு வெடிக்கக்கூடிய கலவை உண்டாகி, அப்பகுதியில் ஒரு நபர் தீக்குச்சியைக் கொளுத்தியதன் பயனாக விளைந்திருக்கலாம் எனக் கூறியுள்ளார்.

(ஆ) இவ்வறிக்கையை வெளியிட வேண்டிய அவசியமில்லையெனக் கருதப்பட்டதால் இதனை வெளியிடவில்லை.

திரு.கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிலாளி ஒரு தீக்குச்சியை கொளுத்தியதால் இவ்வளவு பெரிய தீ விபத்து ஏற்பட்டது என்பது அடிப்படையிலேயே நம்புவதற்கு முடியாத ஒரு காரணமாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. 9 பேர்கள் உயிரிழந்த மிகப் பெரிய தீ விபத்து. அதுவும் அந்த பேஸின் பிரிட்ஜ் மின் நிலையம் இருக்கும் இடமே மிக குறுகலான இடம். எங்கு பார்த்தாலும் நிலக்கரி பரவி கிடக்கிற சூழ்நிலையில், நல்ல வெய்யில் காலத்தில் உஷ்ணம் அதிகமாகி வெகு எளிதாக தீ பிடிக்கக் கூடிய அபாயம் அங்கே எப்போதுமே இருக்கிறது. அப்படிப்பட்ட அபாயம் இனிமேல் ஏற்படாமல் தடுக்க முன் எச்சரிக்கையாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த விசாரணைக் கமிஷனிலிருந்து ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவர் அவர்களே, அவர்கள் 16 பரிந்துரைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த 16 பரிந்துரைகளின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் முழு விவரங்களையும் இங்கே சொல்ல வேண்டுமானால் பெரிய பட்டியலாக போய்க் கொண்டிருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.